வடசின்னாரிபாளையம் கிராம ஊராட்சி தலைவர் / செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

பிறப்பிப்பவர் : P.மகேஸ்வரி பிரகாஷ்

ந.க.எண் : 01/2023-24 நாள் : 22 .01.2024

பொருள் : மனைப்பிரிவு அங்கீகாரம் திருப்பூர் மாவட்டம் குண்டடம் ஊராட்சி ஒன்றியம் வடசின்னாரிபாளையம் கிராம ஊராட்சி க.ச.எண் 46/2, 54/3B ,15992 சமீ பரப்பில் அமைந்த மனைப்பிரிவு மனைகளை அங்கீகரித்து ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை: 1. அரசாணை எண் : 138 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நவ4(3) நாள் : 04.06.2004

2. அரசாணை எண் :79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நவ4(3) நாள் : 04.05.2017

3. அரசாணை எண் :141 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நவ4(3) நாள் : 23.09.2020

4. அரசாணை எண் :141 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நவ4(3) நாள் : 16.07.2022

5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண் : 13686/2017/எல்ஏ1 நாள் : 08.09.2017

6. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), திருப்பூர் அவர்களின் ந.க.எண்: LB2954NL/2022/TCP, நாள் : 24.01.2023

****

உத்தரவு :

திருப்பூர் மாவட்டம், குண்டடம் வட்டாரம் வடசின்னாரிபாளையம் கிராம ஊராட்சி வடசின்னாரிபாளையம் கிராமம் க.ச.எண் : 46/2, 54/3B, 15992 சமீ பரப்பளவில் புதியதாக அமைந்துள்ள மனைகளுக்கு பார்வை 1முதல் 4 வரை காணும் அரசாணைகளில் குறிப்பிட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு அனுமதியுள்ள குடியிருப்பு மனைபிரிவு வரைபடத்திற்கு SWP/DTCP/Tiruppur/Layout No.28/2023 என்ற எண்ணிடப்பட்டு பார்வை 6ல் காணும் கடிதத்தின்படி தொழில்நுட்ப அளவிலான (Technical Approval) ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்கண்ட மனைகளுக்கு வழிகாடு மதிப்பில் (MARKET VALUE) 3% கீழ்க்கண்டவாறு நில பயன்பாடு மாற்றுக்கட்டணம் உரிய அரசுத்தலைப்பில் கருவூல செலுத்துச்சீட்டு எண் : 20231216001147 நாள் :16.12.2023 ன் மூலம் ரூ.1,77,750(ரூபாய் ஒரு லட்சத்து எழுபத்தேழாயிரத்து எழுநூற்று ஐம்பது மட்டும்) செலுத்தப்பட்டுள்ளது மற்றும் வளர்ச்சி கட்டணம் ரூ.1,81,500/- (ரூபாய் ஒரு லட்சத்து எண்பத்தோராயிரத்து ஐநூறு மட்டும்) ஊராட்சிக்கு வங்கி வரைவோலையாக (வங்கி

வரைவோலை எண் : 498359 நாள் : 18.12.2023, இந்தியன் வங்கி, திருப்பூர்கிளை) வழங்கப்பட்டது.

வ எண்	க.ச.எண்	ஏக்கர்/ சதுர அடி	வழிகாட்டி மதிப்பு ஏக்கர் க்கு ரூ. 15,00,000/- வீதம்	வழிகாட்டு மதிப்பிற்கான நில பயன்பாடு மாற்ற கட்டணம்
1.	46/2,54/3B	3.95 ஏக்கர் (15992சமீ)	59,25,000	1,77,750

எனவே மேற்படி கட்டணங்கள் யாவும் பெறப்பட்டுள்ளதாலும் திருப்பூர் நகர ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு வரைப்படத்தில் உள்ளபடி பூங்கா பரப்பு 1169.14 ச.மீ . பொது உபயோகம் 57.33 ச.மீ மற்றும் மனைப்பிரிவு சாலை 4865.01 சதுர மீட்டர் காங்கயம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் : 8950/2022 நாள் : 08.12.2022 ன் படியும் மின் பகிர்மானத்திற்கான இடம் 57.96 ச.மீ காங்கயம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் : 8951/2023 நாள் : 08.12.2023 ன் படியும் ஊராட்சிக்கு தானக்கிரயம் வழங்கப்பட்டு விட்டதாலும் வடசின்னாரிபாளையம் கிராம ஊராட்சியில் புதிதாக அமைந்துள்ள குடியிருப்பு மனைகளுக்கு பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்பட்டதை தொடர்ந்து பார்வை 6-ல் காணும் கடித வழி தொழில்நுட்ப அளவிலான ஒப்புதல் (Technical Approval) வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து குடியிருப்பு மனைகளை அங்கீகரித்து மனையிட அனுமதி வழங்கி இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

பார்வை 1 முதல் 6 வரையிலான அரசாணை மற்றும் கடிதங்களில் குறிப்பிட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் இதற்கு பொருந்தும்.

22/1/24

தலைவர்

தலைவர்/நிர்வாக அலுவலர்

வடசின்னாரிபாளையம் கிராம ஊராட்சி

22/1/24

பெறுதல்,

திரு.மனோகரன்,
திரு.ராமசாமி,
திரு.செந்தில்குமார்.
குபேரன் நகர், காங்கயம்பாளையம் கிராமம்.

நகல்

1. வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),குண்டடம் அவர்களுக்கு அனுப்பப்படுகிறது.

சான்று

குண்டடம் வட்டாரம் - வடசின்னாரிபாளையம் கிராம ஊராட்சி காங்கயம்பாளையம் குக்கிராமம் சர்வே எண் 46/2, 54/3B, குபேரன் நகர் மனைப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவு நகர் ஊரமைப்புத்துறை (DTCP) தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது - மனைப்பிரிவில் அமைக்கப்பட்ட தார் சாலை ஆய்வு செய்யப்பட்டு இச்சாலை மனைப்பிரிவு பொது மக்கள் பயன்படுத்த தரமாக உள்ளது என இதன் மூலம் சான்றளிக்கப்படுகிறது.

உதவிப்பொறியாளர் (ஊ.வ),
குண்டடம் வட்டாரம்.

10/1/24

D:\Hcl sheets\Dy.BDO\B1 Covering Letters.